அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்.190/2015
தேதி. 11.8.2015

# 5000 பயிற்சித் தொழிலாளர்களுக்காக ஐ.சி.எஃப் அதிகாரியை ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ நேரில் சந்தித்தார்

ஐ.சி.எப் ரயில்பெட்டித் தொழிற்சாலையில் கடந்த 17 ஆண்டுகளாக பயிற்சி பெற்ற பயிற்சிப் பணியாளர்கள் சுமார் 5000 பேர் 1998 ஆம் ஆண்டு முதல் பணி நியமனம் செய்யப்படாமல் அவதிக்குள்ளாகி வருகின்றனர். ஐ.சி.எப் தொழிற்சாலையிலேயே பணி நியமனம் கிடைத்துவிடும் என்று நம்பிக்கையில் வேறு எந்த வேலைகளுக்கும் செல்லாமல் சுமார் 17 ஆண்டுகள் மேற்சொன்ன 5000 குடும்பங்களும் மன உளைச்சலில் வாழ்ந்து வருகிறார்கள். நிறுவனத்தின் பொது மேலாளருக்கு இவர்களைப் பணி நியமனம் செய்ய அதிகாரங்கள் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஐ.சி.எப் பின் பயிற்சிப் பணியாளர்கள் ரயில்வேயின் பிற தொழிற்சாலைகளிலும், மண்டலங்களிலும் பணி நியமனம் செய்துள்ள முன்னுதாரணங்களும் உண்டு. இந்நிலையில் ஐசிஎப் பில் பயிற்சி பெற்று பணிக்காகக் காத்திருக்கும் சுமார் 5000 பேர் பணி நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

இது தொடர்பாக ஐ சி எப் பொதுமேலாளர் திரு.அசோக் அகர்வால் அவர்களை பயிற்சிப் பணியாளர்களுக்கு பணி நியமனம் செய்ய வலியுறுத்தும் விதமாக சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் இன்று (11.08.2015) காலை 11 மணி அளவில் ஐ சி எப் தொழிற்சாலைக்கு நேரில் சென்று கோரிக்கை வைத்துள்ளார். தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்களின் கோரிக்கையை ஏற்று தகுந்த முறையில் பரிசீலிப்பதாக பொது மேலாளர் கருத்து தெரிவித்தார். தங்கள் கோரிக்கையை ஏற்று ஐ சி எப் தொழிற்சாலைக்கு நேரில் வந்து தங்களது நிலையை எடுத்துரைத்து ஆதரவு

*அளித்த சமத்துவ மக்கள் கட்சி தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்களுக்கு, பயிற்சிப் பணியாளர்கள் சார்பில் நெகிழ்ச்சியான நன்றி தெரிவிக்கப்பட்டது. ஐ சி எப் தொழிற்சாலைக்கு வருகை தந்த சமத்துவ மக்கள் கட்சி தலைவரோடு துணைத் தலைவர் நாராயணன் எம்.எல்.ஏ, சென்னை மண்டலச் செயலாளர் சேவியர், மத்திய சென்னை (கி) மாவட்டச் செயலாளர் ராஜா, மேற்கு மாவட்ட செயலாளர் பிரசாத் தொகுதிச்செயலாளர்கள் டி.நாகப்பன், டி.வினாயகமூர்த்தி, லார்டுபாஸ்கர் பகுதிச்செயலாளர்கள் முருகேசப்பாண்டியன், ஐ.சி.எஃப் ர.வேல்முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.*

*நன்றி, வணக்கம்,*
*உழைப்பவரே உயர்ந்தவர்,*
*என்றும் அன்புடன்,*

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்